Puducherry Regional

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—சரவண குமார்

தேதி 19.6.2026 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

உலக சிக்கிள் செல் அனிமியா விழிப்புணர்வு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையின் கீழ் கடந்த 12 ஆண்டுகளில் ஏழைகள், விவசாயிகள், பெண்கள் மற்றும் இளைஞர்களின் நலனில் பல மேம்பாட்டு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

சர்வதேச யோகா தினம் வரும் 21-ஆம் தேதி அன்று உலக முழுவதும் கொண்டாடப்படுகிறது.

புதுச்சேரி காவல்துறை சார்பில் புதிய கிரிமினல் சட்டங்கள் நியாய சன்ஹிதா கண்காட்சி, கடற்கரை சாலை காந்தி திடலில் இன்று காலை நடைபெற்றது.

குடியரசு தலைவர்

உலக சிக்கிள் செல் அனிமியா விழிப்புணர்வு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது. சிக்கிள் செல் அனிமியா எனும் சிவப்பணு குறைபாடு நோயினை ஒழிப்பதற்கு, நிர்ணயிக்கப்பட்ட 2047-ஆம் ஆண்டிற்கு முன்னரே இந்தியா அந்த நோயை முற்றிலும் ஒழித்துவிடும் என்று தாம் நம்புவதாக குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு கூறி உள்ளார். மத்திய பிரதேச மாநிலம் ஓம்காரேஷ்வரில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், நாட்டில் அனைத்து மாநிலங்களின்

ஒருங்கிணைந்த முயற்சிகளால் இந்த இலக்கை எட்ட முடியும் என்று உறுதிபடக் கூறினார். ஆரோக்கியமான மகளிர் வலுவூட்டப்பட்ட குடும்பம் என்ற இயக்கத்தின் கீழ் நாடு முழுவதும் இந்நோயை கண்டறிந்து முற்றிலும் ஒழிப்பதற்கான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகவும், இந்நோயை கண்டறிய இதுவரை நடத்தப்பட்ட பரிசோதனையில் 20 லட்சத்திற்கும் அதிகமானோர் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் திருமதி திரவுபதி முர்மு குறிப்பிட்டார்.

மோடி--12 ஆண்டுகள்-

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையின் கீழ் கடந்த 12 ஆண்டுகளில் அனைவருடனும், அனைவரின் வளர்ச்சி, அனைவரின் நம்பிக்கை மற்றும் அனைவரின் பிராத்தனை ஆகிய கொள்கைகளால் இந்தியா ஒரு குறிப்பிடத் தக்க மாற்றத்தை அடைந்துள்ளது. இந்த காலக்கட்டத்தில் ஏழைகள், விவசாயிகள், பெண்கள் மற்றும் இளைஞர்களின் நலனில் பல மேம்பாட்டு திட்டங்களை மத்திய அரசு செயல்படுத்தி உள்ளது. இந்த 12 ஆண்டுகால ஆட்சியில் வடகிழக்கு பகுதிகளின் முன்னேற்றத்திற்காக மத்திய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் குறிப்பிடத் தக்கது.

இதுகுறித்த கூடுதல் தகவல்கள்..........

நாட்டின் முன்னேற்றத்தில் வடகிழக்கு பகுதிகள் வன்முறை, சாலை மறியல்கள் மற்றும் புறக்கணிப்பால் மட்டுமே அறியப்பட்டது. ஆனால் பிரதமர் திரு நரேந்திர மோடியின் 12 ஆண்டுகால ஆட்சியில் இதை மாற்றி அமைத்து, தொலைதூர மற்றும் மலைப்பாங்கான பகுதிகளை தேசிய பிரதான சாலைகளுடன் இணைக்கும் வசதி அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக சுற்றுலா அதிகரித்து உள்ளூர் வருவமானத்திற்கான சிறந்த வாய்ப்புகளும் உருவாகி உள்ளன. பிரதான் மந்திரி கிராம சாலை திட்டத்தின் கீழ் 47 ஆயிரத்து 270 கோடி ரூபாய்க்கும் மேல் செலவிடப்பட்டு 46 ஆயிரத்து 290 கிலோமீட்டருக்கும் அதிகமான

கிராமப்புற சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. பிரதமரே இந்த வடகிழக்கு பகுதிக்கு 83 முறைக்கு மேல் பயணம் மேற்கொண்டுள்ளார்.

கடந்த 12 ஆண்டுகளில் 8 புதிய பசுமை வெளி விமான நிலையங்கள் உருவாக்கப்பட்டு 2014-ஆம் ஆண்டில் 9 விமானநிலையங்கள் இருந்த நிலையில் தற்போது 17 விமான நிலையங்களாக அதிகரித்துள்ளது.

உதான் திட்டத்தின் கீழ் 90 வழித் தடங்கள் மற்றும் 12 விமானநிலையங்களும் ஹெலிபோர்ட்டுக்களும் செயல்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டன. சுதந்திரத்திற்கு பிறகு முதல் முறையாக 2022-ஆம் ஆண்டில் முதல் சரக்கு ரயில் மணிப்பூரையும், 2023-ஆம் ஆண்டில் மேகாலயாவையும் சென்றடைந்தது. 2025-ல் முதல் ரயில் மிசோரம் மாநிலத்தை சென்றடைந்தது. இதற்கிடையில் வடகிழக்கு பகுதியின் வளர்ச்சியை துரிதப்படுத்தும் வகையில், பி.எம்-டிவைன் திட்டத்தின் கீழ் மொத்தம் 6 ஆயிரத்து 600 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*அமித் ஷா*

நாட்டில் குற்றவியல் நீதி அமைப்பு தற்போதைய மாற்றங்களை பூர்த்தி செய்யும் வகையில் புதுப்பிக்கபட்டு வருவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் இன்று நடைபெற்ற 26-ஆவது இந்திய கைரேகை மாநாட்டில் உரையாற்றிய அவர், சிக்கலான வழக்குகளை எளிமையாக்குவதில் இந்த அமைப்பு உதவி புரிவதாக கூறினார். மேலும் குற்றப் பத்திரிக்கைகள் சுருக்கமாக இருக்க வேண்டும் என்றும், பயன் உள்ள ஆதாரங்களை மட்டுமே நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். புதிய குற்றவியல் சட்டங்களின் கீழ் தொழில்நுட்ப அடிப்படையிலான விதிகளை அரசு தரப்பு திறம்பட பயன்படுத்துவதை உறுதி செய்ய வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார்.

*ராஜ்நாத் சிங்*

இந்தியாவின் உள்நாட்டு பாதுகாப்பு துறை உற்பத்தி, கடந்த நிதியாண்டில் சாதனை அளவாக 1 லட்சத்து 78 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் அதிகமாக உயர்ந்துள்ளதாக மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார். நாக்பூரின் அம்பசாரியில் உள்ள யந்திரா இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் ஆயுத தொழிற்சாலையில் நடைபெற்ற அடிக்கல் நாட்டு விழாவில் உரையாற்றிய அவர், உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட இந்திய பாதுகாப்பு உபகரணங்களுக்கான உலகளாவிய தேவை அதிகரித்து வருவதால் தற்போது பாதுகாப்புத் துறை ஏற்றுமதி சுமார் 40 ஆயிரம் கோடி ரூபாய் உயர்ந்துள்ளதாக கூறினார். இந்த ஆயுத தொழிற்சாலைகளில் உருவாக்கப்படும் அலுமினியம் எக்ஸ்ட்ரூஷன் பிரஸ் மூலம் தயாரிக்கப்படும் உதிரி பாகங்கள் பாதுகாப்பு உபகரணங்களில் மட்டுமல்ல ரயில்வே, இஸ்ரோ மற்றும் டிஆர்டிஓ போன்ற அமைப்புகளின் இயந்திரங்களிலும் பயன்படுத்தப்படும் என்று குறிப்பிட்டுள்ளார். இந்நிகழ்ச்சியில் மகாராஷ்டிர முதலமைச்சர் திரு தேவேந்திர பட்நவீஸ் மற்றும் பாதுகாப்பு உற்பத்தி துறை செயலாளர் திரு சஞ்சய்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

*பிரதமர்-ரோஜ்கர்*

வளர்ச்சி அடைந்த பாரதத்திற்கான வேலை வாய்ப்பு ஊக்கத் தொகை திட்டத்தின் கீழ் 2 ஆயிரத்து 400 கோடி ரூபாய் மதிப்பிலான ஊக்கத் தொகையை இன்று மாலை பிரதமர் திரு நரேந்திர மோடி வழங்கினார். இந்த ஊக்கத் தொகை நாடு முழுவதும் 15 லட்சம் பயணாளிகளுக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்க வழி வகை செய்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் முதன் முறையாக பணிபுரியும் ஊழியர்கள் இந்த ஊக்கத் தொகை பெற தகுதி உடையவர்கள். கூடுதல் வேலை வாய்ப்பை உருவாக்கும் முதலாளிகளுடன் பணியாற்றும் ஒவ்வொரு கூடுதல் பணியாளருக்கும் மாதந்தோறும் 3 ஆயிரம் ரூபாய் ஊக்கத் தொகை பெற இத்திட்டம்

உதவிகரமாக உள்ளது. இந்நிகழ்ச்சியை நாடு முழுவதும் நேரலை ஒலிபரப்பு செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

*மோடி-பயணம்*

பிரதமர் திரு நரேந்திர மோடி, பிரான்ஸ் மற்றும் ஸ்லோவேக்கியா-விற்கான இருநாட்டு பயணத்தை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளார். அவரது பிரான்ஸ் பயணத்தின் போது எவியானில் நடைபெற்ற ஜி-7 உச்சி மாநாட்டில் பங்கேற்றார். இந்த உச்சி மாநாட்டின் ஒரு பகுதியாக அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் டிரம்ப், ஜெர்மன் அதிபர் திரு. ஃபிரெட்ரிக் மெர்ஸ், பிரிட்டிஷ் பிரதமர் திரு. கெய்ர் ஸ்டார்மர் மற்றும் ஐக்கிய அரபு அமீரக அதிபர் திரு ஷேக் முகமது பின் சையீத் அல் நஹியான் உள்ளிட்ட தலைவர்களுடன் இருதரப்பு பேச்சு வார்த்தைகளிலும் பிரதமர் பங்கேற்றார். முன்னதாக திரு மோடி, பிரஞ்ச் அதிபர் திரு இமானுவேல் மேக்ரோன் உடன் இணைந்து பிரான்சின் நைஸ் நகரில் பாரத் இனோவேட்ஸ் நிகழ்ச்சியை தொடக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் இந்தியா, பிரான்ஸ் மற்றும் பிற நாடுகளைச் சேர்ந்த முன்னணி ஸ்டார்ட்-அப் நிறுவனங்கள், கண்டுபிடிப்பாளர்கள், ஆகியோருக்கு ஒன்றிணைந்த ஒரு சிறந்த தளமாக விளங்கியது. பிரதமரின் ஸ்லோவேக்கியா பயணத்தின் போது பிராட்டிஸ்லாவாவில் உள்ள அதிபர் மாளிகையில் அந்நாட்டு அதிபர் திரு பீட்டர் பெல்லெக்ரினி-யை சந்தித்தார். அங்கு நடைபெற்ற சிறப்பு விழாவில் பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு ஸ்லோவேக்கியாவின் மிக உயரிய விருதான முதல் வகுப்பு வெள்ளை இரட்டை சிலுவை விருது வழங்கப்பட்டது.

*யோகா*

சர்வதேச யோகா தினம் வரும் 21-ஆம் தேதி அன்று உலக முழுவதும் கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டின் கருப்பொருள் ஆரோக்கியமான முதுமைக்கான யோகா என்று பாதுகாப்பு அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது.

யோகா தினம் குறித்து ஒரு செய்தி தொகுப்பு.........

(வாய்ஸ்)

*யோகா-*

வாழ்வின் அனைத்து நிலைகளிலும் உடல் வலிமை, மன உறுதி மற்றும் முழுமையான நல்வாழ்வை மேம்படுத்துவதில் யோகா பெரும் பங்கு வகிக்கிறது. சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு இந்திய விமானப் படை நாடு முழுவதும் யோகா நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்துள்ளது. வடக்கில் உள்ள லே-யின் உயரமான மலைகள் முதல் தெற்கில் உள்ள கார் நிக்கோபர் கடற்கரை வரையிலும், கிழக்கில் உள்ள தவாங் எல்லைகள் முதல் மேற்கில் உள்ள புனித நகரமான துவராகா வரையிலும், இந்நிகழ்ச்சிகள் நடைபெறும் என்று பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. விமானப்படை வீரர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் மட்டுமின்றி பள்ளி மாணவர்கள் மற்றும் என்சிசி மாணவர்களும் நாடு முழுவதும் உள்ள பல்வேறு விமானப் படை தளங்களில் ஏற்பாடு செய்யப்படும் இந்த யோகா நிகழ்ச்சிகளில் பங்கேற்பார்கள் என்று பாதுகாப்பு அமைச்சகம் கூறி உள்ளது.

*நிர்மலா*

மேகாலயாவின் ரிப்போய் மாவட்டத்தில் உள்ள போய்ரிம்போங்கில் வடகிழக்கு பிராந்தியத்தின் மிகப் பெரிய இயற்கை முறை வாசனைப் பொருட்கள் பதப்படுத்தும் நிலையத்தை மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமனுடன் இணைந்து, மேகாலயா முதலமைச்சர் திரு கான்ராட் கே சங்மா மற்றும் சிக்கிம் முதலமைச்சர் திரு பிரேம்சிங் தமாங் ஆகியோர் தொடக்கி வைத்தனர். அரசின் வடகிழக்கு பிராந்தியத்திற்கான இயற்கை முறை மதிப்பு சங்கிலி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ஊக்குவிக்கப்பட்ட கிழக்கு ரிப்போய் இயற்கை முறை விவசாயி உற்பத்தியாளர் நிறுவனம் மூலம் இந்த வசதி அமைக்கப்பட்டுள்ளது. சுமார் 32 கோடி ரூபாய் முதலீட்டில் உருவாக்கப்பட்ட இந்த நிலையம் இஞ்சி, மஞ்சள், மிளகு மற்றும் மிளகாய் உள்ளிட்ட இயற்கை முறை வாசனைப் பொருட்களை ஆண்டுக்கு 10 ஆயிரம் மெட்ரிக் டன்னுக்கும் அதிகமாக பதப்படுத்தும் திறன் கொண்டது. நிகழ்ச்சியில் உரையாற்றிய மத்திய நிதியமைச்சர் 2024-ல் புவியியல் குறியீடு பெற்ற லகாடாங் மஞ்சள்

உள்ளிட்ட உயர்தர இயற்கை முறை விளை பொருட்களில் மேகாலயா கொண்டு வந்துள்ள சிறப்பு அம்சங்களை எடுத்துரைத்தார்.

*தமிழ்நாடு*

கர்நாடக அரசு காவிரியின் குறுக்கே மேகதாது அணை கட்டும் நடவடிக்கைக்கு எதிராக தமிழக அரசு கொண்டு வந்த தனி தீர்மானம் சட்டப்பேரவையில் இன்று ஒரு மனதாக நிறைவேறியது. முன்னதாக இந்த தீர்மானத்தை முன் மொழிந்து பேசிய தமிழக முதலமைச்சர் திரு விஜய், அரசின் மேகதாது அணை தொடர்பான திட்ட அறிக்கையை மத்திய அரசு பரிசீலிக்க கூடாது என வலியுறுத்தினார். கர்நாடக அரசின் இந்த செயலுக்கு சட்டப்பேரவை கடும் எதிர்ப்பை தெரிவிப்பதாகவும் அவர் கூறினார். அரசியல் கட்சிகளுக்கு இடையே கொள்கை நிலைப்பாட்டில் வேறுபாடுகள் இருந்தாலும், மக்களுக்காக ஒன்றுபட்டு இருக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். முன்னதாக இன்று காலை அவை கூடியதும் மறைந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் நாஞ்சில் முருகேசன், சாமிநாதன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் நல்லக்கண்ணு, திரைப்பட இயக்குநர் பாரதிராஜா, தயாரிப்பாளர்கள் ஆர் பி சவுத்ரி, கே ராஜன் ஆகியோர் மறைவிற்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

*புதுச்சேரி-கண்காட்சி*

புதுச்சேரி காவல்துறை சார்பில் புதிய கிரிமினல் சட்டங்கள் நியாய சன்ஹிதா கண்காட்சி கடற்கரை சாலை காந்தி திடலில் இன்று காலை நடைபெற்றது. இக்கண்காட்சியை துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், மற்றும் முதலமைச்சர் திரு ரங்கசாமி ஆகியோர் தொடக்கி வைத்து அரங்குகளை பார்வையிட்டனர். சட்டமன்ற உறுப்பினர்கள் திரு விக்னேஷ் கண்ணன், திரு அழகு சுந்தரம், திரு ராமு, தலைமைச் செயலர் திரு சரத் சவ்கான், காவல்துறை தலைமை இயக்குநர் திருமதி ஷாலினி சிங், காவல்துறை உயர் அதிகாரிகள் மற்றும் துறை இயக்குநர்கள் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர். புதிய கிரிமினல்

சட்டங்களின் நடைமுறை, காவல்துறையின் செயல்பாடுகள், கடந்த 12 ஆண்டு காலத்தில் அறிமுகம் செய்யப்பட்ட பிரதமரின் மக்கள் நலத் திட்டங்கள் குறித்த அரங்குகள் இக்கண்காட்சியில் இடம் பெற்றன. இன்றும் நாளையும் நடைபெறும் இந்த கண்காட்சியை பொது மக்கள் மற்றும் மாணவ மாணவியர் பார்வையிட்டு பயன் அடையுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

*காரைக்கால்*

புதுச்சேரி, காரைக்காலில் நாளை பொது மக்கள் குறை தீர்ப்புக் கூட்டம் நடைபெற உள்ளது. புதுச்சேரி காவல்துறை சார்பில் பொது மக்கள் சந்திப்பு மற்றும் குறைதீர்ப்பு நிகழ்ச்சி நாளை காலை காரைக்கால் பகுதிகளில் உள்ள பல்வேறு காவல் நிலையங்களில் காலை 11 மணி முதல் மதியம் 1 மணி வரை இந்த மக்கள் மன்றக் கூட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. காரைக்கால் பகுதி மக்கள் இந்த நல்ல வாய்ப்பை பயன்படுத்தி தங்களின் காவல்துறை சார்ந்த குறைகளை மூத்த அதிகாரிகளிடம் தெரிவித்து நிவர்த்தி செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

*உச்சநீதிமன்றம்*

பெண் வழக்கறிஞர்கள் தங்கள் தொழில் முறை பணிகளை திறம்படவும், பாதுகாப்பாகவும், சமமான சூழலிலும் மேற்கொள்வதற்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டியதன் அவசியம் குறித்து உச்சநீதிமன்றம் இன்று வலியுறுத்தி உள்ளது. நாடு முழுவதும் உள்ள பெரும்பாலான நீதிமன்றங்கள், தீர்ப்பாயங்கள் மற்றும் ஆணையங்களில் போதுமான வசதிகளுடன் கூடிய பெண் வழக்கறிஞர்களுக்கான அறைகள் மற்றும் பிற அத்தியாவசிய வசதிகள் இல்லாதது குறித்து எழுப்பப்பட்ட மனுவில் உள்ள பிரச்சனைகளை நீதிமன்றம் இன்று விசாரணைக்கு எடுத்துக் கொண்டது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

உலக சிக்கிள் செல் அனிமியா விழிப்புணர்வு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையின் கீழ் கடந்த 12 ஆண்டுகளில் ஏழைகள், விவசாயிகள், பெண்கள் மற்றும் இளைஞர்களின் நலனில் பல மேம்பாட்டு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

சர்வதேச யோகா தினம் வரும் 21-ஆம் தேதி அன்று உலக முழுவதும் கொண்டாடப்படுகிறது.

புதுச்சேரி காவல்துறை சார்பில் புதிய கிரிமினல் சட்டங்கள் நியாய சன்ஹிதா கண்காட்சி, கடற்கரை சாலை காந்தி திடலில் இன்று காலை நடைபெற்றது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

-----------------------------------------------